Register No. | | | | | | | | |

# FA8A

5875–23

(For the candidates admitted during 2017 – 2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Five-year Regular Course)

Fourth year – Eighth Semester

## INTERPRETATION OF STATUTES

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain elaborately Literal or Grammatical rule of interpretation with relevant case laws.

   இலக்கண மரபு குன்றாப் பொருள் விளக்க விதியினை உரிய வழக்குகளுடன் விரிவாக விளக்குக.

2. Discuss about the Interpretation of Fundamental Rights, guaranteed under the Constitution of India.

   இந்திய அரசமைப்பால் உறுதியளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளின் சட்டப் பொருள் விளக்கத்தைப் பற்றி விவாதிக்கவும்

3. Explain the nature of construction of a taxing statute.

   வரிசட்டத்தின் பொருள் காணும் தன்மையை விவரிக்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the rules to be followed in interpreting mandatory and directory statutes.

   கட்டளையுறுத்தும் மற்றும் அறிவுறுத்தும் செய் சட்டங்களின் பொருள் விளக்கத்தில் பின்பற்ற வேண்டிய விதிகள் குற்த்து விளக்குக.

5. 'Long Title' along with the 'Preamble' is a good guide regarding the object of the Act - Discuss.

"முகப்புரையுடன் கூடிய நீள் தலைப்பு சட்டத்தின் நோக்கத்தை விளக்கும் சிறந்த வழிகாட்டியாகும்" - இக்கூற்றை விவாதிக்கவும்

6. Write about the provisions relating to orders and rules mentioned in the General Clauses 1897.

பொதுவகையச் சட்டம் 1897-ல் குறிப்பிட்டுள்ள ஆணைகள் மற்றும் விதிமுறைகள் தொடர்பான வகையங்களைக் குறித்து எழுதுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Effect of Repeal

ரத்தின் விளைவுகள்

(b) Waiver

நிராகரிப்பு

(c) Litera legis

சட்ட வாசகத்திற்கு இணங்கப் பொருள் காணல்

(d) Ut res magis valeat quam pereat

ஒரு விஷயத்தை இல்லா நிலையாக்குவதை விட செயலாக்கம் கொடுப்பதே நன்று

(e) Imperative Statutes

வினை ஏவும் சட்டங்கள்

(f) Proviso

வரம்புரை

(g) Delegatus non potest delegare

அளிப்படைவு அதிகாரத்தை மீட்டளிக்க இயலாது

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The passport of 'X' was cancelled by a Passport Officer without assigning any reason for his action under Section 10 (c) of the Passport Act. 'X' challenged, the action was unconstitutional and violative of Fundamental Rights. – Decide.

பிரிவு 10 (c) கடவுச் சீட்டுச் சட்டப்படி கடவுச்சீட்டு அதிகாரியால் எந்த காரணமும் கூறாமல் 'X' என்பவரது கடவுக்சீட்டு நீக்கம் செய்யப்படுகின்றது. அரசமைப்புச் சட்டத்திற்கு இது எதிரானது என்றும், தனது அடிப்படை உரிமை பாதிக்கப்படுகின்றது என்றும் 'X' வழக்கிடுகிறார். தீர்மானிக்க.

9. 'X' was dismissed from service based on the findings under the Public Service Enquiry Act. 1960. Subsequently 'X' was prosecuted under various offences of the Prevention of Corruption Act and the Indian Penal Code. Is this sustainable? Advise.

பொதுப்பணியாளர் விசாரணைச் சட்டம் 1960ன் கீழான விசாரணை முடிவுகளின் படி 'X' என்பவர் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டார். பிறகு லஞ்ச தடுப்புச் சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழான பல்வேறு பிரிவுகளில் கீழ் வழக்குத் தொடரப்பட்டது. இது நிலைநிற்கத்தக்கதா? அறிவுரைக்க.

10. A state government, through a notification issued under the Prevention of Food Adulteration Act, banned the sale of Panparag in the state. The company sues the government for violating its fundamental right under Article 19 (1)(g). Decide.

ஒரு மாநில அரசு, உணவுப் பொருள் கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ் ஒரு அறிவிப்பு வெளியிட்டு மாநிலம் முழுவதும் பான்பராக் விற்பனையைத் தடை செய்கிறது. இவ்வறிவிக்கையானது தங்கள் அடிப்படை உரிமை பிரிவு 19 (1)(g)-றை மீறுகிறது எனக் கூறி அந்நிறுமம் அரசு மீது வழக்குத் தொடர்கிறது. தீர்மானிக்கவும்.

———————

Register No. [ ]

**FA8B**

**5845–23**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Five - year Regular Course)

Fourth Year – Eighth Semester

LAND LAWS

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain social Impact Assessment under the Land Acquisition Act 2013. Under which provision land can be acquired in emergency situations? Explain.

   நில எடுப்புச் சட்டம் 2013ல், கூறப்பட்டுள்ள சமூக தாக்க மதிப்பீட்டு முறையை விளக்குக. எந்தப் பிரிவின் கீழ் அவசரகால சூழ்நிலைகளில் நிலம் கையகப்படுத்தப்படலாம்? விளக்குக.

2. What are the grounds for evicting a tenant under Lease and Rent Control Act, 1960?

   வாடகைதாரரை வெளியேற்ற குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாட்டுச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள காரணிகளை விளக்குக.

3. Explain the land tenures prior to Indian Independence.

   இந்திய விடுதலைக்கு முந்தைய நிலவுரிமை முறைகளை விவரி.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the constitution, powers and functions of the Tamil Nadu Land Reforms Special Appellate Tribunal.

   தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் சிறப்பு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் அமைப்பு முறை, அதிகாரம் மற்றும் செயல்பாடுகளை விளக்குக.

5. Public purpose.

பொதுப் பயன்.

6. Permanent settlement.

நிரந்தர நிலவரித் திட்டம்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Kudiyiruppu

குடியிருப்பு

(b) Ryotwari system

ரயத்துவாரி முறை

(c) Article 300-A

ஷரத்து 300-A

(d) Payment of Fair rent

நியாய வாடகை செலுத்துதல்

(e) Melwaram and Kudiwaram

மேல்வாரம் மற்றும் குடிவாரம்

(f) Land Lord

நில உரிமையாளர்

(g) Powers of Record Officer

பதிவுரு அலுவலரின் அதிகாரங்கள்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A Christian family consists of husband, wife and two minor sons. The husband and minor sons have not held any property. Wife has 20 standard acres of stridhana land. What is the ceiling on land? Is there any surplus land?

ஒரு கிறித்துவ குடும்பத்தில் கணவர், மனைவி மற்றும் இரு இளவர் மகன்கள் உள்ளனர். கணவர், இளவர்களுக்கு சொத்து ஏதும் இல்லை. மனைவி 20 தரநிலை ஏக்கர் சீதன நிலம் கொண்டுள்ளார். நிலத்தின் உச்சவரம்பு, எஞ்சிய நிலம் என்ன?

9. The land is given to the cultivating tenant for cultivation. Instead of cultivating double crops in the land, the cultivating tenant cultivated single crop. Whether he can be evicted? Explain.

பயிரிடும் குத்தகைதாரருக்கு பயிர்த்தொழில் செய்ய நிலம் கொடுக்கப்பட்டது. அவர் இருபோகம் பயிரிடும் நிலத்தில் ஒரு பயிர் பயிரிட்டார். நில உரிமையாளர் அந்த பயிரிடும் குத்தகைதாரரை வெளியேற்ற இயலுமா?

10. Sethupathy was running a mobile shop under a big tree in a vacant land. Does it come under the purview of building under Lease and Rent Control Act?

சேதுபதி தனது அலைபேசி கடையினை காலியிடத்தில் உள்ள ஒரு பெரிய மரத்தின் கீழ் நடத்தி வருகிறார். அவ்விடம் குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் கட்டிடம் ஆகுமா?

Register No. | | | | | | | | |

FA8C

5846–23

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
★ LIBRARY ★

(Five – year Regular Course)

Fourth Year – Eighth Semester

INTERNATIONAL LAW

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the procedure in connection with admission, expulsion and suspension of States in United Nations.

ஐக்கிய நாடுகள் சபையில் நாடுகளை சேர்தல், வெளியேற்றுதல் மற்றும் நிறுத்தி வைத்தல் குறித்த நடைமுறைகளை விளக்குக.

2. Examine Blackstone's doctrine that the law of nations is part of the law of the land.

நாட்டிடைச் சட்டம் உள்நாட்டுச் சட்டத்தின் ஒரு பகுதியே என்னும் பிளாக்ஸ்டோனின் கோட்பாட்டை ஆராய்க.

3. Explain the custom as a source of International Law with reference to decided cases.

வழக்காறு நாட்டிடைச் சட்டத்தின் மூலம் என்பதனை முடிவுற்ற வழக்குகளை மேற்கோள் காட்டி விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the jurisdiction of the International Court of Justice and state how are the decisions of the Court enforced.

சர்வதேச நீதிமன்றத்தின் அதிகார வரம்பை விவரித்து மேலும் அந்நீதிமன்றத்தின் தீர்ப்புகள் எவ்வாறு செயல்முறைப்படுத்தப்படுகிறது என்பதை குறிப்புரைக்க.

5. Explain the various modes of acquiring and losing nationality.

நாட்டுரிமையை பெறுவதற்கும் இழப்பதற்கும் உரியமுறைகளை விளக்குக.

6. Explain the Rule of Double Criminality.

இரட்டை குற்றவிதியை விளக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக

(a) Double Veto

இரட்டை வெட்டு வாக்கு

(b) Stimson Doctrine

ஸ்டிம்சன் கோட்பாடு

(c) Five freedoms of Air Space

காற்று மண்டலத்தின் ஐந்து சுதந்திரங்கள்

(d) Diplomatic privileges

தூதுவரின் சிறப்புரிமைகள்

(e) Dualism

இருபொருள் வாதம்

(f) Intervention

தலையீடு

(g) International Seabed Authority

நாட்டிடை கடல் அடித்தள அதிகார அமைப்பு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of laws and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'L' a merchant ship belonging to State 'A' collided in the Contiguous Zone with another ship 'M' belonging to State 'B' which were not carrying the lights as required by the laws which has resulted in huge loss. Ship 'M' brings a claim for damages against state 'A'. Is it sustainable? Decide.

'ஆ' நாட்டைச் சேர்ந்த 'M' என்னும் கப்பலுடன் 'அ' நாட்டு 'L' என்னும் வியாபாரக் கப்பல் சட்டப்படி விளக்குகள் எதுவும் பொருத்தப்படாமல் எல்லையோர கடலை ஒட்டியப் பகுதியில் மோதியதன் விளைவாக பெருத்த சேதத்துக்குள்ளானது. அதனால் 'M' என்னும் கப்பல் 'அ' நாட்டுக்கு எதிராக இழப்பீடு கோருகிறது. இதன் இழப்பீட்டுக் கோரிக்கை நிலைக்கத்தக்கதா?- தீர்மானிக்கவும்.

9. State 'R' discharges all its untreated waste into the territory of State 'S'. Due to this State S's environmental conditions are getting worsed. Aggrieved by this, the State 'S' claims compensation against state 'R'. Is her claim maintainable? Decide.

'S' என்னும் நாட்டில் 'R' நாடானது தன்னுடைய சுத்திகரிக்கப்படாத கழிவுகளை அதன் எல்லையில் வெளியேற்றுகிறது. அதனால் 'S' நாட்டில் சுற்றுச்சூழல் தூய்மைக்கேடு படுமோசமானது. அதனால் 'S' நாடானது 'R' நாட்டின் மீது இழப்பீடு கோருகிறது. அதன் கோரிக்கையானது நிலைக்கத்தக்கதா? தீர்மானிக்கவும்.

10. State 'A' has successfully extradited a fugitive criminal from State 'Y' for charge of Murder. But State 'A' tried him not for murder but for causing grievous hurt to a man named Curzon. Now the fugitive raises objection that he cannot be tried for other offences. Decide.

'Y' நாட்டிலிருந்து தப்பி ஓடிய குற்றவாளியை கொலை குற்றத்திற்காக 'A' நாடானது வெற்றிகரமாக மீட்டது. ஆனால் 'A' நாடு கொலை குற்றத்திற்காக விசாரணை செய்யாமல் கர்சன் என்ற நபரை கொடுங்காயம் விளைவித்தற்காக விசாரணை நடத்தியது. தப்பியோடிய குற்றவாளி வேறுகுற்றத்திற்காக தன்னை விசாரணை செய்யக் கூடாது என ஆட்சேபனை தெரிவிக்கிறார். தீர்மானிக்கவும்.

---